# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 12/ஆ1/2024 நாள். 18.01.2024

பொருள் : பள்ளிக்கல்வி – 2022-2023 மானியக் கோரிக்கையில் அறிவிக்கப் பட்ட சிறந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது வழங்க தலைமையாசிரியர்கள் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் பணிபுரிபவர்கள் விபரம் கோரியது – தொடர்பாக

பார்வை : 1.சென்னை-6, பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.03166/ஐ/இ1/2023 நாள்.27.12.2023

2.அரசாணை (1டி) எண்.45 பள்ளிக் கல்வி (பொது11) துறை நாள்.29.12.2023

..............

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2022-2023 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மான்ய கோரிக்கையின் போது 11.04.2022 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சிறந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான "அறிஞர் அண்ணா தலைமைத்துவ விருது" க்கு பார்வை (2)இல் தெரிவித்துள்ள அரசாணையின் பின்னிணைப்பு 1இல் தெரிவித்துள்ள நெறிமுறைகள் வழிகாட்டுதல்கள் மூலம் இருமடங்கு எண்ணிக்கையிலான தலைமையாசிரியர்கள் தெரிவு செய்து மதிப்பீட்டு படிவம் மற்றும் விவர அறிக்கை மாநிலத் தேர்வு குழுவுக்கு பரிந்துரை செய்ய இயக்குநர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய / அதற்கு மேல் பணியாற்றிவரும் தலைமையாசிரியரின் பங்களிப்பு ஆகியவற்றை கருத்தில்கொண்டும், ஒழுங்கு மற்றும் குற்றவியல் நடவடிக்கை ஏதும் நிலுவையில் இருத்தல் கூடாது எனவும் கீழ்க்கண்ட மதிப்பீட்டு நெறிமுறைகளின் படி சமர்ப்பித்திட தெரிவிக்கப்படுகிறது.

அ) பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரித்தல் இடைநிற்றலை முற்றிலுமாக தவிர்த்தல், பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து பள்ளிக்கு மீண்டும் கொண்டு வருதல், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துதல், புதுமையான கற்பித்தல் முறைகளை பின்பற்றுதல், பள்ளிக் கட்டமைப்புக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் பெறச் செய்தல், பள்ளிக் கட்டமைப்புக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் பெறச் செய்தல், பள்ளி மேலாண்மைக்குழுவுடன் ஒருங்கிணைந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபாடுதல், ஆசிரியர்களை ஒருங்கிணைந்து பள்ளியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், மாணவர்களின் பிரச்சனைகளுக்கு உளவியல் பூர்வமாக தீர்வுகளைக் கண்டறிந்து நடைமுறைப்படுத்துதல் என அனைத்து தளங்களிலும் சிறப்பாக செயல்படும் தலைமையாசிரியர் கண்டறிய தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆ) மாணவர்களின் கல்விச் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பவராகவும் தனித்திறன்கான இசை, ஓவியம், விளையாட்டு ஆகியவற்றில் மாணவர்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பவராகவும் இருத்தல் வேண்டும். கல்வி இணை செயல்பாடுகளான தேசிய மாணவர் படை, சாரண சாரணியர் இயக்கம், நாட்டு நலப்பணித்திட்டம், இளஞ்சிறார் செஞ்சிலுவை, பள்ளி அளவிலான மன்றங்கள் என மாணவர்களின் பன்முகத்திறனையும் வெளிக் கொணர்பவராகவும் இருக்க வேண்டும். பள்ளியில் நூலகத்தினைத் திறம்பட செயல்படுத்தி

பாட நூல்களைக் கடந்து மாணவர்களிடையே பொதுவான வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.

மேற்கண்ட வழிக்காட்டு நெறிமுறைகளின் படி தகுதிவாய்ந்த அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் உரிய ஆவணங்களுடன் (நிபந்தனைகளுக்குட்பட்டு) 2022-2023 ஆண்டிற்கான "அண்ணா தலைமைத்துவ"விருதுக்கான கருத்துருவினை தயார் செய்து 3 (மூன்று) நகல்கள் உரிய ஆவணங்களுடன் 19.01.2024க்குள் இவ்வலுவலகத்தில் நேரில் சமர்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

// ஓம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்
அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்

நகல்.
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலைக் கல்வி)
மாவட்டக் கல்வி அலுவலகம்
வேலூர்.